Deposition of Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No.CC.No. 25 / 2021

**DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS No.10**

| | | | |
|---|---|---|---|
| Name: | சம்பத் | Calling: | சிறப்பு உதவி ஆய்வாளர் |
| Father's/Husband's Name: | கோவிந்தசாமி | Religion: | |
| Village: | கல்லரபட்டி | Age: | 57 |
| Taluk: | வாணியம்பாடி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 19.08.2025

( 1 ம் எதிரி ஆஜர். 2 ம் எதிரி ஆஜர் இல்லை, கு.வி.மு.ச 317 ன் படி மனுத்தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கபட்டது. )

அ.சா. 10 முதன்மை விசாரணை

நான் தற்போது காவலூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 2017 ம்வருடம் வாணியம்பாடி கிராமிய காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வந்த நிலையில் 30.06.2017 ம் தேதி, நிலைய பொறுப்பு அதிகாரி உத்தரவின் பேரில் வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக இருக்கும் வேணு வயது 64 த/பெ பெருமாள், மாரியம்மன் கோவில் தெரு, குந்தாணிமேடு கிராமம், வாணியம்பாடி தாலுக்கா என்பவரை விசாரிக்க அவர் 29.06.2017 ம் தேதி, மாலை 05.00 மணிக்கு குந்தாணிமேடு, பஜனை கோவில் தெரு வாதியின் அப்பாவீட்டிடம் சொத்து பாக பிரிவினை சம்மந்தமாக ரிஜீஸ்டர் செய்வது சம்மந்தமாக வாதியின் தம்பி விஸ்வநாதனின் மகன் கோபிநாதன் மற்றும் மேட்டுபாளையத்ததை சார்ந்த ஜெயவேல் ஆகியவர்களுக்குள் வாக்குவாதம் ஏற்பட்டு கோபிநாதன் வாதியை அசிங்கமாக பேசி கையால் வலது பக்க வாயின்மீது குத்தியும் அதில் பல் ஒன்று விழுந்துவிட்டதாகவும், சூரி கத்தியால் வலது பக்க நெற்றியில் இரத்தகாயம் ஏற்படுத்தியதாகவும் கோபிநாதன் சூரிகத்தியை காட்டி வாதியை கொலை செய்யாமல் விடமாட்டேன் என்று மிரட்டியதாகவும் உடன் இருந்த ஜெயவேல் வாதியை கீழே தள்ளி காலால் மார்பு மீது உதைத்ததாகவும் காயம் பட்ட வாதி

வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்ததாகவும் வாதி கொடுத்த வாக்குமூலத்தை 30.06.2017 ம் தேதி, 13.00 மணிக்கு பதிவு செய்து மேற்படி வாக்குமூலத்தை படித்துக்காட்ட சரி என்று வாதியிடம் கையொப்பம் பெற்றுக்கொண்டு பிறகு வாணியம்பாடி கிராமிய காவல்நிலையம் சென்று நிலைய பொறுப்பு அதிகாரி திரு. தங்கராஜன் சிறப்பு உதவி ஆய்வாளர் அவர்களின் பார்வைக்கு வைத்தேன். இது சம்மந்தமாக வழக்கு பதிவு செய்து சிறப்பு உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரிகள் தரப்பு குறுக்க விசாரணை

இந்த வழக்கில் நான் தான் வழக்கு பதிவு செய்தேனா என்றால் இல்லை, திரு. தங்கராஜ், உதவி ஆய்வாளர் தான் பதிவு செய்தார். நான் அ.சா.1 இடம் பெற்ற வாக்குமூலம் பெற்றதினை என் மேல் அதிகாரிகள் எப்போது என்னை விசாரித்தார்கள் என்றால் 01.07.2017. என்னுடைய வாக்குமூலத்தை நான் சொல்ல சொல்ல தட்டச்சு செய்து சரிபார்த்து சரி என்று சொன்னேனா என்றால் சரிதான். நான் அ.சா.1 இடம் பெற்ற வாக்குமூலத்தில் 28.06.2017 என்று முதலில் எழுதப்பட்டு பிறகு 29.06.2017 என திருத்தம் செய்யபட்டுள்ளது என்றால் சரிதான். இந்த தேதியை யார் கூறி திருத்தம்செய்தேன் என்றால் விபத்து பதிவேட்டில் மருத்துவர் குறிப்பிட்டு இருந்ததை வைத்து திருத்தம்செய்தேன். அ.சா 1 கூறிய வாக்குமூலத்தை நான் பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய வாக்குமூலத்தில் வாதி அசிங்கமாக திட்டி , கையால் வாய் என்று மட்டும் உள்ளதே தவிற மேற்படி என்ன செய்தார்கள் என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். என்னிடம் அ.சா. 1 வேணு வாக்குமூலம் கொடுக்கும்போது எத்தனை பல் விழுந்ததாக கூறியுள்ளார் என்றால் பல் விழுந்துவிட்டதாக மட்டும் தான் கூறியிருந்தார். தற்போது முதன்மை சாட்சியத்தில் ஒரு பல் விழுந்ததாக கூறியிருந்தால் தவறு என்றால் சரியல்ல. நான் அ.சா.1 வாக்குமூலம் கொடுக்கும் சமயத்தில் விழுந்த பல்லை என்னிடம் ஒப்படைத்தாரா என்றால் இல்லை. அ.சா.1 எத்தனை பல் விழுந்தது என்று அவர் வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான்பதிவு செய்துள்ள வாக்குமூலத்தில் எத்தனை பல் விழுந்தது என்று கூறிவில்லை என்றால் சரிதான். அ.சா. 1 வாக்குமூலம் பெறும் சமயம் அவரது மகள் கோமதி இருந்தாரா என்றால் நினைவில்லை.நான் வாக்குமூலத்தை அ.சா.1 யிடம் வாங்கினேனா அல்லது அ.சா.2 யிடம் வாங்கினேனா என்றால் அ.சா.1 யிடம் வாங்கினேன். அப்படியானால் அ.சா.2 தான் தான் வாக்குமூலம் கொடுத்ததாக அவருடைய சாட்சியத்தில் கூறியிருப்பது தவறு என்றால் சரிதான். நான் அ.சா. 1 இடம் வாக்குமூலத்தை பெறவில்லை என்றாலும் விபத்து பதிவேட்டை பார்த்து எழுதியதால் தான் சம்பவம் நடந்த தேதி மாறுபட்டு உள்ளது என்றால் சரியல்ல. அ.சா.1 யிடம் வாக்குமூலம் பெறாமல் அ.சா.2 யிடம் வாக்குமூலம் பெற்று பொய்யாக

சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. நான் பெற்ற வாக்குமூலத்தில் கத்தியை காட்டி யார் மிரட்டியதாக கூறியுள்ளதா என்றால் ஆமாம்.கத்திக்கும் சூரிகத்திக்கும் வித்தியாசம் உள்ளது என்றால் சரிதான். அ.சா.1 கொடுத்த வாக்குமூலத்தில் கத்தியை காட்டி மிரட்டியதாக குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. நான் பதிவு செய்த வாக்குமூலத்தில் எந்த வரிசையில் கத்தியை காட்டி மிரட்டியதாக குறிப்பிட்டுள்ளது என்றால் அ.சா 1 ன்வாக்குமூலத்தில் 28 வது வரிசையில் சூரிகத்தியை காட்டி மிரட்டியதாக குறிப்பிட்டுள்ளது. என் உயர் அதிகாரி விசாரணையில் நான் கத்தியை காட்டி மிரட்டியதாக மிகைபடுத்தி கூறியுள்ளது சரியா என்றால் சரியல்ல.நான் வாக்குமூலம் பெற்றது ஒன்று என் மேல் அதிகாரியிடம் கூறியது ஒன்று எல்லாம் முரண்பட்டு இருப்பதால் நான் வாக்குமூலம் பெற்றதே தவறு என்றால் சரியல்ல. அ.சா.1 யை சரியாக விசாரித்து வாக்குமூலம் பெறாமல் எதிரியின் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தது தவறு என்றால் சரியல்ல.

சாட்சி கையொப்பம்
(ஓம்.) சம்பத்

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K
Date: 2025.08.20 10:16:21 +0530